குடும்ப ஓய்வூதியம், மருத்துவ உதவி, வீட்டு மனை வழங்கும் திட்டம், வீட்டு வாடகைக் குடியிருப்பு, இப்படி எண்ணற்ற நல்ல பணிகளைச் செய்து வருகிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

70—

திருக்கோயில் யானை

***6325—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு யானை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு நன்கொடையாளர்கள்மூலம் யானையினை உபயமாகப் பெற்று பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*

திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வாழ்ந்துவரும் ஏழை எளியோர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் வாரி வழங்கும் வள்ளல் குணம் கொண்ட எங்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) மனிதர்களுக்கு*

2012 ஏப்ரல் 10]

மட்டுமல்ல; யானைகளுக்கும் புத்துணர்ச்சி முகாம் நடத்தி, அவற்றின் வாழ்வில் வசந்தத்தை உருவாக்கிய எங்கள் இதய தெய்வமே! திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு நன்கொடையாளர்கள் மூலமாக யானை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்கு ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துவிட்டு, நாளைக்கு அதை* consider *செய்வோம்.* Please sit down.

3. விதி 110—ன்கீழ் அறிக்கை

தமிழ்ப் புத்தாண்டு தினம் முதல் உழவர் பெருவிழா முகாம்கள் நடத்துவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டுள்ளார்கள்; அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11—10

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும், இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற மகாகவி பாரதியின் குறிக்கோள் நிறைவேற, பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்ப உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதும், உணவுப் பாதுகாப்பில் நிலையான தன்மை அடைவதும் மிக மிக*